# <u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அன்னூர்.</u>

## <u>O.S. No. 18 / 2024</u>

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள், திங்கட்கிழமை 24-ம் நாள் திரு.பொன்னுசாமி என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873ம் ஆண்டு 10வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. வெ.மோனிகா, பி.ஏ.,பி.எல்.,எல்.எல்.எம்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிபதி, அன்னூர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பொன்னுசாமி | வயது | 80 |
| த.பெ. | அப்பாச்சிக்கவுண்டர் | தாலூக்கா | அன்னூர் |
| கிராமம் | ஆம்போதி | மாவட்டம் | கோவை |
| தேதி | 24.11.2025 | PW-1 | |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். இந்த வழக்கில் என் தரப்பு சாட்சியத்தினை பொருத்து பிரமாண வாக்குமூலம் ஒன்று தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். எனவே, என் சாட்சியத்தினை ஏற்றுக் கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். என் சாட்சியத்தின் தொடர்ச்சியாக இதில் பின் வரும் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 25.11.1952 | பாக சாசன பத்திர எண். 511/1952 – சான்று நகல். |
| வா.சா.ஆ.2 | 04.02.2000 | தட பாத்திய ஒப்பந்தம் – நகல்.<br>(**இந்த ஆவணமானது ஒளி நகல் என்றும், அசல் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், பதிவு செய்யப்படாத ஆவணம் என்றும், இந்த ஆவணத்தில் வாதி ஒரு தரப்பினர் இல்லை என்ற பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. ஆட்சேபணை குறித்து தீர்ப்பின் போது தீர்மானிக்கப்படும்**) |
| வா.சா.ஆ.3 | | தாவா சொத்தினை காட்டும் வாதியின் மாதிரி வரைபடம் |
| வா.சா.ஆ.4 | 15.03.2010 | 1ம் பிரதிவாதியின் மீது வாதி அன்னூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் நகல் (இந்த ஆவணம் நகல் என்றும், இதற்கான ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்ற ஆட்சேபணைக்கு உட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது) |
| வா.சா.ஆ.5 | 27.072016 | அவிநாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அ.வ.எண். 404/2010ன் தீர்ப்பாணை – சான்று நகல். |
| வா.சா.ஆ.6 | 27.072016 | அவிநாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் |

| | | |
|---|---|---|
| | | அ.வ.எண். 404/2010ன் தீர்ப்பு – சான்று நகல். |

தாவாபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

Sd/- V.Monika
District Munsif cum Judicial Magistrate,
Annur.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.